# 14 திருவுருவங்களும் ஆலய வழிபாடும்

விக்கிரகம் என்ற சொல் வி + கிருஹம் எனப்பிரித்து நோக்கப்படும். எனவே இறைவனின் மேலான இருப்பிடமே விக்கிரகமாகும். வி என்றால் மேலான என்றும் கிருஹம் என்றால் வீடு என்றும் பொருள்படும். சிவன் உருவம், நாமம், குணம், குறியற்று எங்கும் வியாபித்திருப்பது சொரூபநிலை. ஆன்மாக்களுக்கு அருள் புரியும் பொருட்டு சொரூப நிலையிலிருந்து தன்னை ஒருபடி கீழே இறக்கிக் கொண்டு உருவம், நாமம், குணம், குறிகள் என்பவற்றோடு வரும் நிலை தடத்த நிலையாகும். தடத்தநிலை வடிவங்களையே ஆலயங்களில் வைத்து வழிபடுகின்றோம். திருவுருவங்களைச் சிறப்பாகக் கருங்கல்லிலும், செம்பு, வெள்ளி, ஐம்பொன், இரத்தினம் போன்றவற்றிலும் அமைக்க வேண்டும் என ஆகமங்களும், சிற்பசாத்திரங்களும் கூறுகின்றன. சிதம்பரத்தில் இரத்தினக்கல்லில் நடராஜர் திருவுருவத்தைக் காணலாம்.

ஆலயங்களில் வழிபாடு செய்யும் போது திருவுருவங்களின் தாற்பரியத்தை அறிந்து வழிபாடு செய்தல் வேண்டும். குறிப்பிட்ட தெய்வத்தால் பெறும் பயன்களை அறிந்து அத்தெய்வத்தைப் போற்றித் துதிக்கும் திருமுறைப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள் என்பவற்றை ஓதியும் வழிபட வேண்டும். இங்கு ஓர் சிவாலயத்தில் இடம்பெறும் திருவுருவங்களையும் அவற்றுக்குரிய வழிபாடு பற்றியும் சுருக்கமாகப் படிப்போம்.

## 1. பிள்ளையார்

சைவசமய மரபிலே முதலில் வழிபடப்படுபவர் பிரணவ சொரூபியான பிள்ளையார். இவர் யானை முகத்தோடு தும்பிக்கை, விசாலமான செவிகள், நான்கு கரங்கள், பெரிய வயிறு என்பவற்றுடன் காணப்படுவர். இவரைச் சிரசிலே மூன்று முறை குட்டியும், செவியை மாறி இரு கைகளாலும் பிடித்து மூன்று முறை தோப்புக்கரணம் போட்டும் நிலத்தில் விழுந்து ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும். விநாயகருக்குரிய ''பிடியதன் உருவுமை...'' ''திருவாக்கும் செய் கருமம் கைக்கூட்டும்'', ''ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை'' தோத்திரப் பாடல்களை ஓதி வழிபட வேண்டும். மலரும் அறுகம்புல்லும் போன்ற விநாயக வழிபாட்டுக்குரியன. சிதறு தேங்காய் அடித்து வழிபடுதல் விநாயக வழிபாட்டில் சிறப்பிடம் பெறுகின்றது.

## 2. சிவலிங்கம்

இது சிவாலயங்களில் கருவறையில் மூலமூர்த்தியாகக் காணப்படும். இது சிவமும் சக்தியும் இணைந்த அருவுருவத் திருமேனி ஆகும். திருவுருவை வணங்கும் போது இரண்டு கைகளையும் கூப்பியபடி முதலில் சிரசிலும், பின்மார்பிலும் வைத்து வணங்க வேண்டும். பின் நிலத்தில் விழுந்து ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்து திருமுறைகளை ஓதி வழிபடல் வேண்டும். வில்வம், வன்னி, முட்கிழுவை, மாவிலங்கு, விளாத்தி போன்ற பஞ்சப்பத்திரங்களாலும் தாமரை, முல்லை, கொன்றை போன்ற மலர்களாலும் அர்ச்சனை செய்வித்தல் வேண்டும்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 3. அம்பாள்

சிவன் கோயில்களிலே தெற்கு நோக்கிய சந்நிதியில் நின்ற கோலத்தில் அம்பாள் காணப்படுவாள். அம்பாளின் நான்கு கரங்களில் கீழ்க்கரங்கள் அபய வரதகரங்களாகக் காணப்படும். மேற்கரங்களில் ஒன்று உருத்திராட்ச மாலையையும் மற்றையது தாமரைப் பூவையும் தாங்கிக் காணப்படும். சிவலிங்கத்தை வழிபடுவது போல் இங்கும் வழிபாடாற்ற வேண்டும். பன்னிரு திருமுறைகளில் அம்பாளுக்கு உரியவற்றையும் அபிராமி அந்தாதிப் பாடல்களையும் ஓதி வழிபட வேண்டும். நறுமணமிக்க மலர்களாலும், குங்குமம், செந்நெல்லரிசி, மாதுளம்பழமுத்து என்பவற்றாலும் அர்ச்சனை செய்வித்து வழிபடல் வேண்டும்.

## 4. நர்த்தன கணபதி

இவர் சிவாலய அர்த்தமண்டபத்தின் தெற்குப் புற வெளிச் சுவரில் கோஷ்டத்தில் இருப்பார். இடது காலை தூக்கியும் கைகளை வீசியும், தும்பிக்கையை சற்றுத் தூக்கியும் நடன கோலத்தில் இவர் காணப்படுவார். பிள்ளையாருக்குரிய வழிபாடு போன்றே நர்த்தன கணபதிக்கும் வழிபாடாற்ற வேண்டும்.

## 5. தட்சணாமூர்த்தி

இவர் கருவறையின் தெற்குப்புற வெளிச்சுவரில் தெற்கு நோக்கிய கோஷ்டத்தில் காணப்படுவார். கல்லால மரத்தின் கீழ் கல்லாசனத்தின் மீது இவர் அமர்ந்திருப்பார். வலது கால் முயலகனை மிதித்த நிலையிலும் இடது கால் மடித்து வலது தொடை மீது பொருந்தவும் வீற்றிருப்பர். அவரது நான்கு கரங்களில் ஒன்றான வலது மேற்கரம் பாம்பினால் உடுக்கைச் சுற்றித் தாங்கியும், இடது மேற்கரம் தீச்சுடரை ஏந்தியும் காணப்படும். கீழ்வலது கரம் சின்முத்திரையாகவும், இடது கரம் நீண்ட நிலையில் ஏட்டைத் தாங்கியும் உள்ளன. முகம் சாந்தமாகக் காணப்படும். கண்கள் மூக்கு நுனியை நோக்கி இருக்கும். சில இடங்களில் சடா முடியாகவும் அமைந்திருக்கும். சடையில் பிறை, கங்கை, அமிர்தகலசம், கொன்றை மலர் என்பன காணப்படும். கல்வி விருத்தி வேண்டுபவர்கள், வியாழ சுகம் வேண்டுபவர்கள் வியாழக்கிழமைகளில் மஞ்சட்பட்டு, மஞ்சள் மலர் மாலைகள் சாத்தி, நெய்விளக்கேற்றி மஞ்சள் நிறப்பழங்களை நிவேதனம் பண்ணி, கொன்றை போன்ற மஞ்சள் நிறப் பூக்களால் அர்ச்சனை செய்வித்து சிவலிங்கத்தைப் போன்று வழிபடவேண்டும். ''பண்டு நால்வருக்கு அறமுரைத்தருளி...'' ''அன்றால மரநிழற்கீழ்'' போன்ற தோத்திரப் பாடல்களை ஓதி வழிபடவேண்டும்.

## 6. இலிங்கோற்பவர்

இவர் கருவறையின் மேற்குப்புற வெளிச்சுவரின் உள்ள கோஷ்டத்தில் காணப்படுவர். ஆவுடையார் இன்றி உருளை வடிவான இலிங்கத்தினுள் மேலும் கீழும் பிறைவடிவமாக அமையுமாறு பாதங்களும் முடியும் காணமுடியாதவாறு உருவம் செதுக்கப்பட்டிருக்கும். கீழப்புறம் பன்றியும் மேற்புறம் அன்னப்பட்சியும்



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

தாழம்பூவும் செதுக்கப்பட்டிருக்கும். திருநாவுக்கரசரின் இலிங்கப் புராணப் பாடல்களை பாடிச் சிவலிங்கம் போன்று வழிபட வேண்டும். மகா சிவராத்திரியன்று நள்ளிரவு இலிங்கோற்பவருக்குச் சிறப்பாக பூசை நடைபெறும்.

## 7. பிரம்மா

பிரம்மா படைத்தற் கடவுள், கருவறையின் வடக்குப்புற சுவரில் கோமுகைக்கு மேல் கோஷ்டத்தில் வடக்கு நோக்கி நின்ற கோலத்தில் இவ்வுருவம் காணப்படும். நான்கு முகங்களில் ஒரு முகம் பின்புறம் இருப்பதால் மூன்று முகத்தையே பார்க்க முடியும்.

## 8. துர்க்கை

அர்த்த மண்டப வடக்குப் புற சுவரில் காணப்படும் கோஷ்டத்தில் நின்ற கோலத்தில் காணப்படுவார். நான்கு கரங்களில் மேற்கரங்களில் சங்கு, சக்கரமும் கீழ்க்கரங்களில் சூலம், கபாலம் என்பனவும் காணப்படும். ஆரோக்கியம், வெற்றி வேண்டி வெள்ளி, செவ்வாய் தினங்களில் நெய்விளக்கேற்றி குங்கும அர்ச்சனை செய்வித்து அபிராமி அந்தாதி, துர்க்காஷ்டகம் போன்றவற்றை ஓதி வழிபாடு செய்ய வேண்டும்.

## 9. சோமாஸ்கந்தர்

பத்ம பீடத்தில் சிவனும் உமையும் இருக்க இவர்களுக்கிடையில் முருகன் குழந்தையாக நின்ற கோலத்தில் இரண்டு கரங்களிலும் தாமரை மலர் கொண்டு நிற்பர். பஞ்சலோகத்தில் வடிவமைக்கப் பட்டிருக்கும். இல்வாழ்வு சிறக்க முத்தி கிடைக்க சிவலிங்கம் போன்று வழிபடவேண்டும்.

## 10. மகாவிஷ்ணு

காத்தற் கடவுளாகிய இவர் நின்ற கோலத்தில் காணப்படுவார். கருங்கல்லால் வடிவமைக்கப் பட்டிருக்கும். நான்கு கரங்களோடு காணப்படுவர். மேற்கரங்கள், சங்கு, சக்கரம் கொண்டும், கீழ்க்கரங்கள் அபயவரத கரங்களாகவும் காணப்படும். இவரின் இரு மருங்கிலும் இரண்டு கரங்களோடு பூமிதேவி, ஸ்ரீதேவி காணப்படுவர். இவருக்கு நீலப்பட்டு சாத்தி, துளசி, விஷ்ணுகிராந்தி ஆகியவற்றிலான மலர்மாலைகள் சாத்தி தயிர், நெய் நிவேதனம் செய்து அர்ச்சனை செய்வித்தல் வேண்டும். இவரை ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களை ஓதி வழிபட வேண்டும்.

## 11. மகாலட்சுமி

இவர் தாமரைப் பூவில் இருந்த கோலத்தில் காணப்படுவர். நான்கு கரங்களில் மேற்கரங்கள் தாமரைப்பூக்களை ஏந்தியும், கீழ்க்கரங்கள் அபயவரதக் கரங்களாகவும் காணப்படும். இவரின் இருமருங்கிலும் இரு யானைகள் நீரூற்றி வழிபாடு செய்வதான அமைப்புள்ளது. திருமணம் வேண்டியும், மாங்கல்யம் நிலைக்கவும், செல்வம் வேண்டியும், செவ்வாய்க்கிழமைகளில் பசுநெய் விளக்கேற்றி நறுமலர் மாலைகள் சாத்தி குங்கும அர்ச்சனை செய்வித்து வழிபடல் வேண்டும். அபிராமி அந்தாதி, கனகதாரஸ்தோத்திரம், நவரத்தினமணிமாலை போன்றவற்றை ஓதி வழிபடல் வேண்டும்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 12. முருகன்



இவர் நின்ற கோலத்தில் நான்கு கரங்களோடு காணப்படுவர். மேற்கரங்களில் சக்திவேல், குலிசாயுதமும். கீழ்க்கரங்கள் அபயவரதக் கைகளாகவும் காணப்படும். இரு புறத்திலும் இரண்டு கைகளோடு வள்ளி, தெய்வயானை ஆகிய இருசக்திகள் நின்ற நிலைகளோடு காணப்படுவர். சில சிவாலயங்களில் மயில் மீது அமர்ந்த கோலத்தில் ஆறுமுகத்தோடும் பன்னிருகரங்களோடும் ஆறுமுகசாமி (சண்முகர்) காணப்படுவார். கட்பம் இலை, மலர்மாலைகள் சாத்தியும், மாவிளக்கேற்றி, தேனும் தினை மாவும் நிவேதனம் செய்து கடம்பமலர், இலை, தாமரைப்பூ போன்றவற்றால் அர்ச்சனை செய்வித்து வழிபடவேண்டும். அருணகிரியாரின் கந்தரனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தரந்தாதி திருப்புகழ், வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் என்பவற்றையும் கந்தசஷ்டி கவசம் போன்ற தோத்திரங்களையும் ஓதி வழிபடவேண்டும்.

## 13. நடராஜர்



இத்திருவுரு வசந்த மண்டபத்திற்கு மேற்குப் பக்கத்தில் அல்லது நிருத்த மண்டபத்தில் தெற்கு நோக்கி ஆடிய கோலத்தில் காணப்படுவர். இவ்வுரு ஐம்பொன்னால் அமைக்கப்பட்டிருக்கும். வலது கால் முயலகனை மிதித்தும் இடது கால் தூக்கி ஆடும் நிலையிலும் காணப்படும். நான்கு கரங்களில் மேற்கரங்கள் இரண்டும் உடுக்கையும் அக்கினியையும் தாங்கி நிற்க வலது கீழ்க்கரம் அபயகரமாகவும் இடது கீழ்க் கரம் வலப்பக்கம் நீண்டு வீசுகரமாகவும் காணப்படும். சடை இருபுறமும் பரந்திருக்கும் நடராஜரைச் சுற்றி 51 சுடர்களைக் கொண்ட திருவாசி காணப்படும். இவரின் இடது புறத்தில் இவரிலும் உயரத்தில் குறைந்தளவில் சக்தி சிவகாம சுந்தரியாக நின்ற கோலத்தில் காணப்படுவர். இவரின் இரு கரங்களில் வலது கரத்தில் நீலோற்பவ மலர் காணப்படும். தில்லைக்குரிய திருப்பதிகங்கள் ஓதி சிவலிங்கம் போல் வழிபாடு செய்ய வேண்டும். நடராஜர் அபிஷேகப் பிரியர் எனவே இவருக்குரிய ஆறு அபிஷேகங்களை வருடத்தில் செய்து வழிபட வேண்டும்.




இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 14. சந்திரசேகரர்



வசந்த மண்டபத்தில் சிவனும், உமையும் நின்ற கோலத்தில் காணப்படுவர். இவ்வுருவங்கள் ஐம்பொன்னால் செய்யப்பட்டிருக்கும். சிவனது நான்கு கரங்களில் மேற்கரங்கள் மழுவையும், மானையும் தாங்கியுள்ளன. கீழ்க்கரங்கள் அபய வரத கரங்களாகக் காணப்படும். இடப்பக்கம் சற்று உயரம் குறைவாக உமை இருகரத்தோடு நிற்பார். வலது கரம் நீலோற்பவ மலரைத்தாங்க இடது கரம் நீண்டு தொங்கிக் காணப்படும். திருவுலா எழுந்தருளும் சிவனது மூர்த்தங்களில் இதுவும் ஒன்றாகும். சிவலிங்கம் போன்று இங்கும் வழிபாடுகள் செய்ய வேண்டும்.

## 15. வைரவர்



இவர் ஆலயக் காவல் தெய்வம். இவர் கோபுர வாயில், மணிக்கோபுரத்திற்கு வடக்கே மேற்கு நோக்கி நின்ற கோலத்தில் காணப்படுவர். இவ்வுரு கருங்கல்லால் செய்யப்பட்டிருக்கும். பின்புறம் நாய் வாகனம் காணப்படும். நான்கு கரங்களில் மேற்கரங்கள் பாம்பினாற் சுற்றிய உடுக்கையும், அக்கினிச் சுடரையும் கீழ்க்கரங்கள் சூலம், கபாலத்தையும் தாங்கியிருக்கும். இரண்டு பற்கள் நீண்டிருக்கும். தலையின் மேற்புறம் அக்கினிச் சுடர் காணப்படும். நோய், பிணி, துன்பம் நீங்க, சிவப்பு, நிறப்பட்டு சிவப்பு நிறமலர் மாலை, வடைமாலை சாத்தி, பால்ரொட்டி, பொங்கல் நிவேதனம் செய்து செவ்வலரி போன்ற சிவப்பு நிற மலர்களால் அர்ச்சித்து திருமுறைகள் பாடி வழிபட வேண்டும்.

## 16. சண்டேஷ்வரர்



கருவறையின் வடக்குப் புறமாக தெற்கு நோக்கிய சிறிய அமைப்பைக் கொண்ட கோயிலுக்குள் இரண்டு கரங்களையும் கூப்பி மழுவாயுதத்தையும் கொண்டு சிவனை நோக்கி வழிபட்ட வண்ணம் காணப்படுவர். சிவாலய வழிபாட்டில் சண்டேஸ்வரரிடம் இடது பக்கத்தால் சென்று சிவனுக்கு நிவேதித்த பிரசாதத்தையும் அர்ச்சித்த மலர்களையும் பாதத்தில் வைத்து மூன்று முறை கைதட்டி ''கும்பிட்ட பலனைத் தாருங்கள்'' எனக் கேட்டு ஒருமுறை மட்டும் வழிபடவேண்டும். மீண்டும் அப்பாதையால் வரவேண்டும்.

## பாடச்சுருக்கம்

- தெய்வத் திருவுருவங்கள் சிவனின் தடத்த வடிவங்களாகும்.
- திருவுருவங்களையும் அத்தெய்வங்களுக்குரிய வழிபாட்டு முறைகளையும் பயன்களையும் அறிந்து வழிபடுவது நல்லது.
- பிள்ளையாரை வழிபடும் போது தலையில் குட்டி, தோப்புக்கரணமிட்டு வழிபடல் வேண்டும்.
- சிவாலயக் கருவறையில் சிவனது அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம் காணப்படும்.
- பெண் தெய்வங்களை வழிபடும் போது அபிராமி அந்தாதி போன்ற பாடல்களை ஓதி வழிபடலாம்.
- மகாவிஷ்ணுவை வழிபடும் போது ஆழ்வார்களது நாலாயிரத் திவ்வியப்பிரபந்த பாடல்களிலிருந்து சில பாடல்களை ஓதி வழிபட வேண்டும்.
- முருகப் பெருமான் முன்னிலையில் அருணகிரிநாதர் பாடல்கள், கந்தசஷ்டி கவசம் என்பவற்றையும் ஓதி வழிபட வேண்டும்.
- ஆலய வழிபாட்டின் நிறைவில் ஒரு முறை மட்டும் சண்டேஸ்வரரை வழிபட வேண்டும்.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. பிள்ளையாரின் மேற்கரங்களில் ..........................., .................................. என்பன காணப்படும்.
2. தெட்சணாமூர்த்தி சிவாலயங்களில் ................................... தெற்குப் புறச்சுவரில் அமைந்த ................................... காணப்படுவர்.
3. மகாவிஷ்ணுவின் இருமருங்கிலும் ....................................... ............................. எனும் இரு சக்திகளைக் காணலாம்.
4. முருகனை அர்ச்சிப்பதற்கு ..................................... இலை ................................. மலர் சிறந்ததாகும்.
5. குங்குமத்தினால் ......................................, ...................................... போன்ற தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்வித்து வழிபடவேண்டும்.

## ஆ. செயற்பாடு

- சிவாலயங்களில் காணப்படும் திருவுருவங்களின் மாதிரிகளைச் சேகரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- சிவன் கோயிலுக்கு விதி முறைப்படி சென்று திருவுருவங்களை ஆராய்ந்து, அறிக்கையொன்றை தயாரித்து கலந்துரையாடுக.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக